## திருமதி ராஜம் கிருஷ்ணன் படைப்புகள்

# மாறி மாறிப் பின்னும்

## 25

அவளைச் சிறை வைத்திருந்த தோடு கழன்று விட்டது. மென் முனையாக எழும்பி எல்லையற்ற பெருவெளியில் சஞ்சரிக்கின்றன.

காற்றுப்போல் இருந்தாலும் பேராற்றல் கூடி இருக்கிறது. ஆனந்த ரூபிணியாக மகிழ்கிறாள். உயிர்களைச் சுமப்பவள்; உயிர்களைப் பேணுபவள்; உயிர்களைக் காப்பவள்; ஒவ்வொரு பெண்ணுடலிலும் மகாசக்தியான விந்துவாக அவள் திகழ்கிறாள். அந்தச் சக்தியை அழிப்பதாக எண்ணிப் பதர்கள் அந்த உடலை மாசுபடுத்துகிறார்கள்; குதறுகிறார்கள். ஆனால் அழிக்க முடியுமோ? அந்த உயிர் மூலாதார சக்தி. அது இயற்கையின் மாற்றங்களில் உயிர்த்துக் கொண்டே இருக்கிறது. சலித்துக் கொண்டே இருக்கிறது. கானகத்தில் அது நிலை கொள்கிறது. மலை முடிகளில் அது விளங்குகிறது. முட்டைக் குஞ்சு பொரிந்து கண் விழிக்கும் போதும், தாய்ப் பிராணியின் மடியில் சிறு செப்புவாய் பாலருந்தும் போதும் அவள் பரிபூரண மோன சுகமாய் இலங்குகிறாள்.

துப்பாக்கியோ தோட்டாவோ சுமந்து வருபவர் பிடரியில் குந்தி ஒரே அழுத்தல். இரைக்காக ஓர் உயிர் மற்ற உயிரில் பாயும்போது, அது அவள் கண்மூடி சுகமனுபவிக்கும் பிள்ளை விளையாட்டாகிறது.

செந்நாய்கள் மானைப் பற்றி இரையெடுத்துவிட்டு மீதியை விட்டுப் போகின்றன. வில் - அம்போ, துப்பாக்கி தோட்டாவோ இல்லாத எளிய வனவாசி, அதை அம்மை தந்த பிரசாதம் என எடுத்து ஆற்றில் கழுவித்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

துண்டு போடுகையில் எங்கிருந்தோ வருகிறான் ஒரு பேராசை மனிதன். அவன் வனக்காவலனா?

ஆகாகா... யாருக்கு யார் காவல்?

அந்த எளியனை இழுத்துச் சென்று வனவிலங்குகளை, காட்டை, அழிப்பாயா... அழிப்பாயா என்று அடித்து இம்சைப்படுத்துகிறான்; விடுகிறான். அவன் வினையே அவனை அழிக்கிறது.

அந்தக் காவலன் காரணம் தெரியாமல் மறுநாளே மடிந்து போகிறான்.

மலைமுடிகளில் தங்கும் மேகங்கள் சூலுற்று, மழையைப் பொழிகின்றன. பச்சை; எங்கும் பூரிப்பு; மங்களம்...

கானாறுகள் நிரம்பி வழிகின்றன. தேயிலைச் செடிகள் புதிய தளிர்கள் அரும்பக் குலுங்குகின்றன.

பெண்கள்... அணியணியாகத் தேயிலை கிள்ளுகிறார்கள். அப்போது அந்த மலைப்பாதையில் பஸ் வருகிறது.

பத்து நாட்களாய்ப் பாதை தடைப்பட்ட பின் செப்பனிடப்பட்டு வருகிறது. அந்த வண்டியில் ஜோதி, புருஷண் மணி, குழந்தை எல்லோரும் வருகிறார்கள். ஓட்டுபவன் மணிதான். நடத்துனன் துரை, வளைவில் திருப்புவதைக் கவனமாகக் கண்காணிக்கிறான்.

எதிரே, ஒரு சிறு கார் வருகிறது. அது எளிய பெண்களை, உழைப்பாளிகளை மேய்க்கும் ஓர் அநியாய அதிகாரியைச் சுமந்து வருகிறது. அவன் நின்று நிதானித்து ஏறும் பஸ்ஸுக்கு இடம் விடாமல் வருகிறான்.

விளிம்பில் நிலைநிறுத்த முடியாமல் சக்கரம் நழுவ, கண நேரத்தில், தொண்ணூறு உயிர்களையும் மூட்டை முடிச்சுகளையும் சுமந்து வரும் பஸ்...

ஓ... அதில் ஜோதி... அவள் குழந்தை, அவள் தகப்பன்... பெங்களூரில் மனநல மருத்துவமனையில் இருந்த அவள் அன்னை... எல்லோரும் வருகிறார்கள்.



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

‘ஆண்டவனே! தாயே! வனமாதா! காப்பாற்று... கீழே கிடுகிடு பள்ளத்தில் மல்லாக்கச் சரியும் அந்தப் பெரிய வண்டியை, துருத்திக் கொண்டிருந்த சிறு பாறை அப்படியே தாங்குகிறது.

ஒரு சிறு குஞ்சுக்குக்கூடக் காயமில்லை. அந்தச் சிறு பாறை, தாயின் பெருங்கருணையாய், அந்தப் பஸ்ஸை, சக்கரங்கள் மேல் நோக்கி இருக்க, மல்லாந்த பஸ்ஸை வலிய கரங்கள் ஒரு மலரை ஏந்துவது போல் ஏந்தி நிற்கிறது. கதவு வழியும், சன்னல் வழியும் எப்படி அவர்கள் வெளி வருகிறார்கள்?

ஏதோ ஓர் தாயின் கைகள் அத்தனை மக்களையும் பத்திரமாக மேலே ஏற்றுகின்றன.

மாஸ்டர்... மாஸ்டர் குழந்தையைச் சுமந்து கொண்டு ஏறுகிறார். தேயிலைச் சரிவுகளில் ஏறி இறங்கிப் பழகிய முத்தம்மா, வில்சன், மேரி இவர்கள் மற்றவர்களைப் பத்திரமாக மேலே ஏற்றிவிடுகிறார்கள். ஆனால் இந்த அதிசயம் இங்கு நிகழ்கையில், இவர்களை ஓரத்தில் ஒதுக்கிவிட்டு முன்னே இறங்கிய கார், அடுத்த திருப்பத்தில் நிலைகுலைய, நானூறடி பள்ளத்தில் சரிந்து வீழ்கிறது.

....

என்ன அதிசயம்?...

இந்த பஸ் எப்படித் தப்பியது?...

இந்தப் பாறை தெய்வம்ங்க. இது இல்லேன்னா... ஒரு சிறு குஞ்சுகூடத் தப்பாது!

ஜோதி குழந்தையை உயிர் பிழைத்த சந்தோஷத்தில் அணைத்து முத்தமிடுகிறாள். குழந்தை கக்குப் பிக்கென்று சிரிக்கிறது.

“ஆமாங்க, அந்தக் கார் வுழுந்திற்று. குட்ச்சிப் போட்டு ஓட்டுனா, யாரை யார் ஏமாத்துறது? மலை தெய்வம், அத்தை ஏமாத்த முடியுமா? மனசில



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

வஞ்சம் வச்சிட்டோ, பொய்ய வச்சிட்டோ இங்க யார் நடந்தாலும் ஒரு நா... அதுக்குத் தண்டனை கிடைக்கும். கிடைச்சுடுதுங்க. தந்தத்துக்காக யானையைக் கொன்ன ஆளு ஒருத்தன, அங்கியே செத்து அழுகிக் கிடந்தான்னு சொல்லிட்டாங்க..."

"எங்ஙன?"

"அதா மேமலைப் பள்ளத்துக் கசத்துல... அது எத்தினி நாளாச்சோ? ஃபாரஸ்டுக்காரங்க சொல்லிட்டாங்க... நமக்கென்னப்பா தெரியும்?"

"வேறல்ல சொல்லிட்டாங்க! ஒரு ஃபாரஸ்டு காவல், ரொம்பத்தா கெடுபிடு பண்ணிட்டு அடிச்சி இமிசை பண்ணிட்டிருந்தா... வெறவு பொறுக்க எந்தப் பொம்பிளயேனும் தனிச்சு வந்திட்டா இழுத்திட்டுப் போயிடுவானாம். அவங்கூட எப்பிடின்னு தெரியாம செத்துக் கெடந்தானாம், வூட்டு வாசல்லியே..."

"அதில்லப்பா, அவந்... துப்பாக்கியத் துடச்சிட்டுருந்தானாம். தவறுதலா கைபட்டுக் குண்டு வெடிச்சிட்டதாம். ஆள் குளோஸ்னு சொல்லிக்கிறாங்க."

"அதென்னமோ, இந்த மலங்காட்டுல நாம உழச்சிப் புழைக்கிறோம். அடுத்தவரைக் கெடுக்கிறதோ, உறிஞ்சிப் புழக்கிறதோ, மோசம் நினைக்கிறதோ, ஒரு நாளும் நல்லபடியா சீவிக்கத் தோதாயிருக்காது..."

நடத்துனரையா, அவர்களைப் பார்க்கிறான்.

"ஏம்ப்பா, வாரியளா, பொடி நடயா நடந்து முத்துக்காடு எஸ்டேட்ல போயிச் சேதி சொல்லிட்டு, எதுனாலும் வண்டிக்கு வழி பண்ணுவம். பொம்புளக, சின்னப்புள்ளகள மட்டுமாணும் ஏத்தி பத்திரமாக் கொண்டிட்டுப் போவலாம். இனி கீழே சேதி சொல்லி டிரான்ஸ்போர்ட் வண்டி வர நேரமாவும்..." என்று அழைக்கிறான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

தோட்டக்காரர்கள் இசக்கி, வின்செண்ட், மாரிமுத்து ஆகியோர் விரைவாக நடக்கின்றனர். மாஸ்டர் சாமான்களை ஒதுக்கி எடுப்பதில் ஈடுபடுகிறார்.

வானில் மேகங்களை விலக்கிக் கொண்டு கார் காலத்துச் சூரியன் எட்டிப் பார்க்கிறான்.

பூமித்தாய் பரவசமாகிறாள்.

பசுங்குவியலிடையே, ஒரு கரும்புள்ளியாய், கீழ்ப் பள்ளத்தில், அந்தக் கார் - உருத் தெரியாமல் - அற்பப் பதர்கள்...

பறவைகள் சிறகடித்துச் சிலிர்க்கின்றன.

ஒரு மான் கூட்டம் பசுமைகளிடையே நகருகிறது. வயிரக்கால்களாக வானவனின் சுடர் அந்தப் பொன்னுடலின் புள்ளிகளைக் காட்டுகின்றன. முதல் தலை மருண்டு மருண்டு பார்த்து நகர, கூட்டமும் தொடருகிறது. கானக அரசி... குளிர்ந்து எந்த மனிதனின் உறுப்பும் படாதபடித் தன் செல்வங்களைக் காக்கிறாள். அவளுடைய ஆட்சியின் நறுமணம், புல்லிலும் பூண்டிலும் முள்ளிலும் புதரிலும் வீசுகிறது. உயிர்க்குலமே... அச்சமில்லை...

அவள்

“வாலை உமாதேவி, மாகாளி, வீறுடையாள்
மூலமாசக்தி மூவிலை வேல் கையேற்றாள்
.....

சிங்கத்திலேறிச் சிரிப்பாலுலகழிப்பாள்;
சிங்கத்திலேறிச் சிரித்தெவையுங் காத்திடுவாள்
நோவுங் கொலையும் நுவலொணாப் பீடைகளும்,
சாவுஞ்சலிப்பு மெனத்தான் பல்கணமுடையாள்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

.....

மங்களஞ் செல்வம் வளர் வாழ்நாள் நற்கீர்த்தி,
துங்கமுறு கல்வியெனச் சூழும் பல்கணத்தாள்
ஆக்கந்தானாவாள் அழிவு நிலையாவாள்
போக்கு வரவெய்தும் புதுமை யெலாந்தானாவாள்
மாறி மாறிப் பின்னும், மாறி மாறிப் பின்னும்
மாறி மாறிப்போம் வழக்கமே தானாவாள்...

மாசத்தி - பராசத்தி..."*

(* மகாகவி பாரதி - பாஞ்சாலி சபதம்)

பெருமாள் காணி கொக்கறை*யின் இழுகார்வை ஒலியோடு இசைந்து மெய்ம்மறந்து பாடுகிறார். கானகமே அந்த ஓசையில் இலயிக்கிறது.

(* கொக்கறை - கைச்சிலம்பு போன்றதொரு இசைக்கருவி)

(முற்றும்)

*****



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com